426

தொழிலாளி

கம்பதாசன்

O~,INKM1,T
N52
102450

....கலபஞ பிரசுரம்....

தொழிலாளி

★

கவிஞர்

கம்பதாஸன்

★

கல்பனா பிரசுரம்
சென்னை-6

முதற்பதிப்பு '52
உரிமை பதிவு.

O-,1NKMI,T
X52

ஆசிரியர்
எழுதிய பிறநூல்கள் :

1. கனவு (கவிதை)
2. விதியின் விழிப்பு (,,)
3. முதல் முத்தம் (,,)
4. அருணோதயம் (,,)
5. புதுக் குரல் (,,)
6. பாட்டு முடியு முன்னே......
7. சோஷலிஸ கீதங்கள் (கவிதைஅச்சில்)
8. முத்துச் சிமிக்கி (கதை)
9. சிற்பி (நாடகம்)
10. ஆதி கவி (நாடகம்)
11. ஜீவ நாடகம் (நாடகம்)
12. கன்னிவள நாடு (,,)
13. வாலா ளுக் ! (,,)
14. கன்னியின் சபதம்......... (நாடகம்)

No. 102450

விலை அணா 8.

1. தொழிலாளி

சூரியனும் ஓர் தொழிலாளி.........தினம்
சுற்றும் உலகும் தொழிலாளி
வாரி, அலையும் தொழிலாளி.........எதிர்
வந்திடும் காற்றும் தொழிலாளி
மாரி நதியும் தொழிலாளி.........இருள்
மலரும் உடுவும் தொழிலாளி
பாரை நடத்தும் தொழிலாளி...இனி
பரமனடா கலைப் பிரமனடா!

2. செம்படவன்

மூடுபனிக் காலையிலே மீன் பிடிக்க
முதலைநிகர் கட்டுமரம் தன்னிலேறி ;
ஆடுகின்ற அரவைநிகர் கடலலைமேல்
அச்சமின்றி சென்றிட்டான் முத்துமாரி !
பாடும் அலை யோசையிலா ஆழம் பார்த்து ;
பனங்குருத்து விரிவதுபோல் வலைவிரித்தான் ;
ஓடி விளையாடி வந்த மீனினங்கள்
ஒளிபட்ட வைரமென துடிக்கலாச்சு !

எல்லையிலா வானிடையே வெளவால் போலே
இருண்ட மழை மேகங்கள் சூழலாச்சு !
ஜில்லெனவே கடல்வாடை சிலிர்க்கலாச்சு ;
சீறிஅலை பேய்ச்சிரிப்பு சிரிக்கலாச்சு ;
கல்மலையைப் பிளந்தூன்றும் அரசின் வேர்போல்
கண்கூச இடிமின்னல் தோன்றலாச்சு ;
உள்ளமதில் பயமுற்றான் முத்துமாரி !
ஊஞ்சலென கட்டுமரம் ஆடலாச்சு !

ஓவெனவே புயல்காற்று நரியைப் போல
ஊளையிட லாயிற்று ; அலைக் குழிகள்
ஆவெனவே ஆந்தையதன் கண்களாச்சு ;
அலகுகள் போல் மழைத்தாரை பாயலாச்சு !
தாவிகரை சேர்வதற்கு முத்துமாரி
தவிதவித்தான்; அவன்உயிரோ சாற்றலாச்சு:
" பூவினிலே மக்கள் பசி போக்குதற்கு "
போந்த தொழிலாளி நிலை கண்டேனென்றே.

3. கன்னான்

பரமசிவன் செஞ்சடையை விரித்தாற் போல,
பாய்கின்ற விழுதால மரத்தின் பக்கம் :—
அரவதனின் சீறலென மூச்சு விட்டு,
அகடுவிரி துருத்தியதால் உலையை மூட்டி,
சரமழை நாள் தோன்றும் மின் பூச்சிபோல,
தனியுருகும் காதலரின் கண்ணீர் போல,
சுரந்துமறை பொறிபறக்க கனலிரும்பை
தோள் விம்ம சம்மட்டி அடிக்கும் கன்னான் !

பருத்ததலை ; அழுக்கு சிகை ; சிறுத்த நெற்றி ;
படர்புருவம் வளைந்திட்ட கருப்புப் பூரான் ;
உருக்கு விழி ; உள்ளடங்கி எழுந்த மூக்கு ;
உலர் உதடு ; மறியாட்டுக் கொம்பு மீசை ;
இருக்குதெனும் ஒட்டுவயிர் ; ஏற்ற மார்பு ;
இடையினிலே கந்தல் உடை ; துடையோ
தூண்கள் !
கருக்கிருளில் பனிசிந்தும் காட்சி தன்னை
கருமேனி வேர்வையிலே காட்டும் கன்னான்

பண்ணைநிலம் உழும் கலப்பைக் கார்தான் செய்து
பாய்ந்திட்டபசிவயிரில் சுருக்கங் கொண்டான் !

வண்டியிலே பூட்டெருது, குதிரை லாடம்
வழங்கிடினும் தன் காலில் செருப்புமற்ருன் !

சண்டை செயும் வீரருக்கு கைவாள் தந்தும்
தன் துணையாய் தடியெடுக்க உரிமையற்ருன் !

கண்டுபுகழ் விஞ்ஞானக்-காலம் வந்தும்
கதியின்றி உழைக்கின்ற கிராமக் கன்னன் !

பெற்றெடுத்த பிள்ளைமுகம் காண எண்ணி;
பிணமெழுந்து நடப்பதுபோல் குடிசை சென்

குற்றுயிராய் மனையாட்டி காச நோயால் [ருன்
குக்கல் போல் குலைக்கின்ற ஓசை கேட்டான்

வற்றலென இளைந்திருந்த பிள்ளை, பாலே
வாயருந்த துடிதுடித்த நெஞ்சில் விக்கல்

உற்றதினல் செவிடானன்; உன்மத்தன் போல்
ஓயாமல் சம்மட்டி அடிக்கும் கன்னன் !

4. மாடு மேய்க்கும் பையன்

மாடு மேய்க்கும் பையன் !—பண்ணையார்
மாடு மேய்க்கும் பையன் !!
காடுகளில் திரிவான்—அவனிரு
காலில் செருப்பில்லை !
சாடும் மழை புயலும்—உடல்தனை
சரு காக்கும் வெய்யில்
வாடும் வயிர் பசியால்—எனினும்
வளைந்த மிலார் கொண்டு
மாடு மேய்க்கும் பையன் !............
கட்டுக் கடங்காமல்—கொழுத்தொரு
காளை துள்ளியோடும்
சிட்டெனவே பறப்பான்—அதட்டி
தே! தே! என மறிப்பான்
முட்டிவிடும் காளை—அவனின்
மூச்சு திணறி விடும்
வெட்டவெளி இருட்டும்—கண்ணீர்
வெளிப்படும் உடுக்களைப் போல்
மாடு மேய்க்கும் பையன் !...........
தாயும் தந்தையில்லை ;—அவனையே
சார்ந்த உறவில்லை ;
பாயும் படுக்கையில்லை ;—பட்டியில்
படுப்பான் கொசுக் கடியில் ;
வாயுரை பேசமாட்டான் ;—மாட்டின்
வாழ்க்கையோ டொன்றி விட்டான்
ஆயனும் கண்ணபிரான்—கனவில்
ஆடிடுவானோ ? இவன்பால் ?
மாடு மேய்க்கும் பையன் !...........

5. வளையற்காரன்

வளையலோ ! வளையல் !
வளையலோ வளையல் ! !—பலா
சுளையின் நிறத்து வளையல்—பச்சை
கிளியின் நிறத்து வளையல்
வளையலோ வளையல் !
வளையலோ வளையல் !—எழில்
புதிய கன்னிப் பெண்ணே—தன்
புருஷன் கருத்தை அறிய
உதிக்கும் ஆசைபோலே
ஒலிக்கும் கையில் சிரிக்கும்
வளையலோ வளையல் !
வளையலோ வளையல் !—வயல்
நாத்து நட்டிடும் மாது—சொலும்
நாட்டுப் பாட்டுக் கேற்ப
மாத்து தாளம் போட்டு
மகிழ்ச்சி பெருகச் செய்யும்
வளையலோ வளையல் !
வளையலோ வளையல் !—வயிர்
சூலுற்ற இளம் நங்கை—குலம்
துலங்க குழந்தை பெறவே
கோல முடனே அணியும்
கொடி மஞ்சள் நிறமான
வளையலோ வளையல் ! !

வளையலோ வளையல் !—புவி
வாழ்வில் மங்களகரமே—கள்வர்
வாயப்படாத தனமே
ஏழ்நிற வான் வில் போல்
இனிமை இனிமையான
வளையலோ வளையல் !
வளையலோ வளையல் ! !—செங்
கரும்பின் நிறத்து வளையல்—மலர்
அரும்பின் நிறத்து வளையல்
ஆடும் ராட்டை வளையல்
வளையலோ வளையல் !
வளையலோ வளையல் ! !

6. கூடை முடைபவள் ;

வாடிய பிரம்பும் ஏனோ ? — இரத்தம்
வற்றிய நரம்புடலில் முற்றியுளதே!
கூடையும் முடைய வேணுமோ ?—வயிரில்
கொடிய பசி குடலை முடைந்திடுதே !
தாடைகளில் குழி யுளதே !—பழங்கள்
தாங்கிடும் கூடையில் குழி வேணுமோ ?
ஆடையிலே பொத்த லுளதே !—கூடை
யதனிலே பொத்தலுள ததிசயமோ ?

7. ஒட்டர்

சாலை மரங்கள் நிழலினிலே—நாங்கள்
தங்கி வெள வாலென வாழுகின்ருேம் !
காலை யருந்த பருக்கை யின்றி—ஏங்கி
கங்குலில் விண் மீனைக் காணுகின்ருேம்!
பாலை நிலமென தேகம் சுண்ட—பெரும்
பாடு பட்டு பாதை போடுகின்ருேம் !
கூலிபெருத மழையது போல்—நாங்கள்
கொட்டுரோம் ரத்தக் கண்ணீர் புவியில் !!

8. ரிக்ஷாக்காரன்

கந்தை உடைதான் இடையிலுண்டு—கையில்
கைதியைப் போலவே விலங்கு யுண்டு ;
சந்து முனையிலே நாய்களைப்போல்—என்றன்
சகாக்கள் கூட்டமும் நிற்ப துண்டு.

கையினில் வாடகை ரிக்ஷாவுண்டு—கால்கள்
கடலலைப் போலோடக் கற்றதுண்டு ;
மெய்மேல் ரவிவொளி வீழ்வதுண்டு—நகர்
வீதியில் பலரென்னைப் பார்த்ததுண்டு.

மோட்டார் வண்டியே கெட்டு விட்டால்—பண
முதலாளி ஒவ்வொரு வேளையிலே
ஆட்டப் பரி என எனை நினைத்து—' ஓடு
அவசரம் ' என்று, அணா தருவார்.

வயிராம் அடுப்பில் பசித்தீவுண்டு—விழி
வழங்கும் நீர்த்துளி சமைப்பதற்கு
உயிர்தளும்பும் உடல் பானையுண்டு—தங்கி
உண்டிடச் சாவாம் விடுதியுண்டு !

மனிதனை மாடாய் ஆக்கிவிட்டு—என்னை
மரணத்தின் வழியில் ஓடவிட்டு
புனிதமாய் அஹிம்சை பேசுகின்றார்!
அன்னோர் புலைச்செயல் போக்கிடும் நாள்வருமோ?

9. படகோட்டி

தேன் தூக்கி முல்லைமலர் சிரிக்கத் தென்றல்
சிலிர்க்கவரும் வசந்தத்தின் மாலைப் போதில்,
வான் நோக்கி நிற்கின்ற வரையின் மீது
வாரியென நீர் தேக்கும் ஏரி தன்னில்,
அன்னம் நிகர் படகோட்டிப் பிழைப்போன்; வேர்வை
அரும்பிடவே புயமலுக்கத் துடுப்புத் தள்ள,
மின்னலிடைப் பெண்ணுடனே ஓர்பணக் காரன்
மிதந்துசெலும் அப்படகுகள் துயின்றான் மெல்ல
இருள் பாய்ந்த மலைக்காட்டில் குயிலே காதல்
இசையெழுப்பத் திசையெல்லாம் நிலவின்வெள்ளத்
தருள் தோய்ந்த எச்சமயம் படகோட்டி
அயர்ந்திருக்கும் காதலரைப் பார்த்தங்கெண்வான்
"பூத்திருக்கும் வேப்பமரத்தோப்பில், நேற்று
புனைந்தகுடில் என்மனைவி பசியால் வாடிக்
காத்திருப்பாள் வழிபார்த்து, இவர்கள் எப்போ
கண் விழித்துக் காசீவார்? எழுப்பலாமா?...
சொல்லரிய உள்ளுணர்ச்சி விழிசுழற்றத்
துளிரிதழ்கள் முத்தத்தின் சுவையில் தோய்த்து
எல்லையிலா இன்பத்துள் மூழ்கி யுள்ளார்!...
இவர்காணும் இன்பமெனக் கேனோ இல்லை?
பாரினிலிக் காதலர்கள் செல்வர்; நல்ல
பட்டுடையும் பொன் நகையும் கொண்டோர்; இந்தப்
பாரிடையே வேண்டுகின்ற இன்பமெல்லாம்

102450

படைத்திடுதல் பணமதனின் சக்தியன்றோம்?

நாவடக்கி சேவஞ் செய் யானே நாளை
நல்லதொரு காலம்வர செல்வனானல்,
பூவணையும் வண்டெனவே என்பெண்டாட்டி
புயமணைந்து படகினிலே பூரித்துய்வேன் !

அந்தநாள் என்படகை இந்நாளிங்கே
அமர்ந்திருப்போர் தள்ளவரின் அப்போதின்னார்
சிந்தைதான் மகிழ்வுறுமோ ? இன்றென்நெஞ்சாய்
செப்பறிய ஏக்கத்தால் துயரில்வேமோ ?

என்னைப் போல் இன்னவரும் எல்லாம் வல்ல
ஈசனருட் படைப்பன்றோ ? இந்த நாட்டில்
இன்பந்தான் பிறருடைய ஒருவர் துன்பம்
ஏற்பதுவோ ? இதிலுள்ள நீதி என்ன ?......

10. நடிகன்

அரங்கமென்னும் அழகின் மலர்—சுவை
யாகியமைந்திடும் அற்புதத் தேன்
பரதமென்னும் பரிதிச் சுடர்—புவி
பாய உதவிடும் படர்ந்த வான்!

பச்சோந்தி போல நொடி யொன்றிலே—பல
பாவனை காட்டிடும் ஜாலக்காரன்
இச்செகமாந்தர் புலன்களையே—நன்று
ஈர்த்திடும் இன்பப்பெரும் சோரன்!

கண்ணுக்கு நேர் செக ஆட்டமதை—நன்று
காட்டும் கலைரசக் கண்ணாடியே!
எண்ணத் துடிப்புகள் தன்னைக்காண—உயிர்
இரகசியத்தின் உள் நாடியே!

கவர்ச்சியே என்றனைபெற்ற அன்னை—உயர்
கருத்ததே என்றனை காத்த தந்தை
தவறான வார்த்தை சாற்றுவனோ—என்றன்
தனியரசாட்சி உலக சிந்தை!

11. தப்பி பிழைப்பவன்

உதிர்ந்த மலர் போல—மக்கள்
உறக்கத் தாழ்ந்திருக்க
எதிர் வீட்டுச் சேவல்—எழுவாய்!
என்றே குரல் தந்தது!

கழுதையின் முன் முகம்போல்—கங்குல்
காட்டும் உஷை ஒளியில்
அழுக்குத் துணி எடுத்து—வண்ணன்
ஆற்றங் கரையடைந்தான்!

கறுத்த மழை மேகம்—இடியைக்
கலந்துமின் காட்டுதல் போல்
முறுக்குத்துணி களதை—கல்லில்
மொத்திட வெண்மை செய்தான்!

பவளக் கதிர் மறைய—வானில்
பளிச்சிடும் தாரகை போல்
துவைத்த துணிகளெல்லாம்—தண்ணீர்
சொட்டப் பிழிந்தெடுத்தான்!

வெண்முகில் கூட்டம் போல்—வேட்டியை
வெய்யிலில் காயவைத்து
தண்ணிழல் தந்து நிற்கும்—வேம்பின்
தருவின் நிழல் அமர்ந்தான்!

“ஊரார் அழுக்குடையை—வெளுக்க
உழைமண் கண்டவனே !
மாராத உன் வினையை—வெளுக்கும்
மருந்ததைக் கண்டதுண்டோ?”

என்று சிறு குரலில்—தென்றல்
இயம்பி மறைந்திடவும்
பின்னும் முனும் பார்த்து—வண்ணான்
பேய்போல் விழிக்கையிலே

நொச்சிப் புதர் தாண்டி—பிறைநேர்
நுதலில் சிவப்பொளிர
“மச்சான் !” எனக் கூவி—வண்ணான்
மனைவி சூழ் கொணர்ந்தாள் !

12. நெல் அறுப்போன்

நெல் என்ற பொன்பல்லை நிலமேல் காட்டி
நிலவூற நகை காட்டும் பயிரை பார் மேல்
கொல்கின்ற தொழில் கொண்டேன், அல்லில் பூக்கும்
கோலமிகும் உடு அறுகும் காலை ரவிபோல்.

நீள்நெற்றி துளிர்த்திட்ட வேர்வைத் துளிகள்
நெல்லுள்ளே அரிசிஎன நிற்கு தையா !
தோள் விம்மக் கதிரறுக்கத் துணிவுகொண்டேன்
சுடும் கண்ணீர் அறுத்தெறியும் கால வாள்போல்!

கொலைகார ஞகிவிட்டேன் ; உண்மை ! பெற்ற
குழந்தைதகளைக் கொல்லுகிறேன், உண்மை ! உண்மை !
தலைத் தோரே, தூக்கிலென்னை யிடுவீர் ! ஆனல்,
சாகடிக்கும் பசிதன்னைச் சமைத்தோன் முன்னே!!

13. நெல் குத்தும் பெண்

மூச்சு விசிறப்பொன் நெல்லுக்குத்தி—அதில்
முத்துப்போல் அரிசி யாமெடுப்போம்
ஆச்சுது குங்கும அந்திப்போது—கொஞ்சம்
அழுத்தியே போடடி உலக்கைதன்னை !

கண்ணிலே மொய்ப்பது கொசுவல்லடி—அது
காளைக்கு ஏற்ற தவிடாமடி !
விண்ணிலே கேட்கும் இடிச்சத்தமே—கண்டு
வெட்கவே போடடி உலக்கையினை !

நாட்டுக் கெல்லாம் உணவளிக்கும்—தமிழ்
நாட்டுப்புறப் பெண் நம்முடைய
வீட்டின் இதயத் துடிப்பெனவே—மூலை
விம்மவே போடடி உலக்கையினை !

14. உழவன் கனு

பாடுபட்டு பசியோடு களைத்த ஏழை
படுத்திருந்தான் உழுதவயல் வரப்பின்மீது
மாடு விட்டு ஏர் கலப்பை அவனின் பக்கம்
மௌனமுடன் படுத்திருந்த வானைநோக்கி
கூடுவிட்டு திகைத்துச் செலும் காக்கை ஒன்று
கூடிவரும் இருள்நோக்கி திகைத்துசெல்ல
ஏடு கட்டும் பால்குடத்தைப் போல வானில்
எழுந்த நிலா ! உழவனவன் கனவு கண்டான்:

நீர் தேக்கி பரம்படித்து வித்துமிட்டான்
நினைவது போல் நாத்ததனை நட்டுவைத்தான்
தூர்போக்கி கிணற் நீரை ஏற்றமிட்டான்
சுடுவெயிலில் களை களைந்து பாத்தியிட்டான்
கார்காட்டும் மின் அலைபோல் பயிர்மேல் செந்நெல்
கதிர்சாயும் அழகதனைக் கண்டு களித்தான்
கூர்தீட்டி அரிவாளைக் கொண்டறுத்தான்
கொத்தாக பிணை கட்டி களத்தில் சேர்த்தான்.

சிட்டதனின் அலகை நிகர் மணியாம் நெல்லை
தீவட்டி தலைப்பாகை பண்ணைக்காரன்
கட்டு கலங் காணும்படி மூட்டை கட்டி
காளை செலும் வண்டியிலே ஏற்றிச் சென்றான்!
கொட்டு பனி தைமாதப் பொங்கல் அந்நாள்
குவலயத்தோர் சூரியனைப் போற்றும் நன்னாள்
வட்டநிலா வான் மறைந்து வாடைக்காற்று
வந்தவனை தட்டிடினும் எழுந்தானில்லை !

15. உழவன் பிள்ளை

ஏழை உழவனின் சேயேன்றன்
எண்ணம் ஈடேற வகையுளதோ ?
தோழரிடத்திலே சொல்ல எணில்
துக்கமே நெஞ்சைப் புடைக்குதையோ

சுந்தரச் செக்கரை முன்னொரு நாள்
சிந்தூர மென்று திலக மிட்டேன் !
அந்தோ ! அதென்றன் மூதாதையர்
சிந்திய குருதிக் கண்ணீரையா !

பின்னர் ஓர்தினம் இன்புறவே
பெரிய விண்மீன் தனை மோந்தேன் !
என்னே ! அதென்றன் தந்தை நுதல்
இருந்த வேர்வைத் துளி கண்டீர் !

வந்திடும் தென்றலில் மற்றொருநாள்
வண்ணத் தமிழிசை கேட்டிட்டேன் !
அந்தோ ! அதென்றன் தாய் பசியால்
வெந்திடும் வேளையில் விட்டஉயிர் !

16. கவிதை கண்டேன்

கலை வீசும் நிலவினிலே காண வில்லை !
கமழ் வீசும் மலரினிலே காணவில்லை !
அலை வீசும் கடலினிலே காணவில்லை !
அணி வீசும் வான்வில்லில் காணவில்லை !
மலை வீசும் தென் றலிலே காணவில்லை !
மணி வீசும் ஜொலிப்பினிலே காணவில்லை !
குலைவீசும் பசியினிலே ஏர்பிடித்தோட்டும்
குடியான மக்களிடம் கவிதை கண்டேன் !

17. கவிஞன்

வண்ணமுற நின்று வாசம் தந்து—இந்த
வையம் மயக்கும் மலர்களெல்லாம்
மண்ணோடு மண்ணாய் மறைந்த பின்னர்—ஒரு
மகிமை யடைந்திட மாண்புளதோ ?

நித்தம் வறுமையில் நெஞ்சழிந்து—தன்னை
நேசனெனச் சொல்ல யாருமின்றி
பித்தன் இவனெனக் காட்சி தந்து—உயிர்
பிரிந்தபின் புகழைப் பெருபவன் யார் ?

காற்றினும் சிறந்த தூய நெஞ்சும்—அலை
கடலைப் பழித்திடும் ஆழ்கருத்தும்
ஊற்றைப் பழித்திடும் புத்துணவும்—இந்த
உலகினில் வாய்த்திட்ட உத்தமன் யார் ?

தூற்றெலன கீழ்விழும் மனதை—மேல்
தூக்கி நிறுத்தி பறக்கச் செய்து
காற்றும் நுழைந்திடா வானமென—ஒரு
கட்டற்று நிற்போன் கவிஞனன்றோ ?

18. பிச்சைக்காரன்

மழை இளைப்பாரிட குட்டையுண்டு—கொடும்
மனதிளைப் பாரிட எண்ணமுண்டு
அழல் இளைப்பாரிட நீருமுண்டு—எங்கள்
ஆசையிளைப்பார உண்டோ இடம்?

பாம்பிளைப்பாரிட புற்றுமுண்டு—பட்சி
பறந்திளைப் பாரிட கூடுமுண்டு
வேம்பிளைப் பாரிட காக முண்டு—எங்கள்
வேட்கை யிளைப்பார உண்டோயிடம்?

நதியிளைப்பாரிட ஆழியுண்டு—கொடும்
நஞ்சிளைப்பாரிட மருந்துமுண்டு
கதிரிளைப் பார இரவுமுண்டு—எங்கள்
கவலை யிளைப்பார உண்டோயிடம்?

கண்ணிளைப்பாரிட தூக்கமுண்டு—அற்ப
கழுதை யிளைப்பாரிடத் துறையுமுண்டு
பண்ணிளைப்பாரிட தாளமுண்டு—எங்கள்
பசியிளைப்பாரிட உண்டோ யிடம்?

19. வளையல் போராட்டம் ;

பணி செய்ய தேயிலையின்
தோட்டம் வரும் முன்பே
பாலூட்டி எம் தாயே
போட்டிட்ட வளையல் !
கனிவுற்று கணவர் என்
கை பிடிக்கும் முன்பே
காதலொடு என் கையைப்
பற்றியதே வளையல் !
தனிச் செல்வ மைந்தனையான்
தாலாட்டும் முன்பே
சல சலத்து பறவையெனப்
பாடியதே வளையல் !
இனி யென்றன் கையிருந்தால்
யான் வளர்த்த தோட்டம்
ஏற்காது என்றெனையே
விரட்டுவதும் முறையா ?

20. புதுக் குரல்

புழுதிஎன எமைமிதித்துப் போகின்றீர்கள் !
பொறுத்திருந்தோம், பொறுத்திந்தோம்
இத்தனை நாள் !
அழுதழுது முறையிட்டு அலுத்துப்போனோம் ;
அனுதாபம் காட்டிடுவோர் யாருமில்லை !
பொழுது புலர் வேளைதனில் வீசும் காற்றில்
புழுதியிலும் புது ஜோதி பூத்திடாதோ ?
விழிமலரச் செய்தபுது விழிப்பினாலே
விண்ணிடிபோல் போர்முரசுகொட்டுகின்றோம்!

புகை கொளுத்தும் தீக்குச்சு என்று எம்மைப்[கள்!
புன் நெருப்பாய் எண்ணமிட்டுப் போகின்றீர்
தகை மிகு அச்சிறு நெருப்பில் சகத்தை எல்லாம்
சாம்பல் என மாற்றும் தனி சக்தி யுண்டு !
நகையுறுத்தி நாண் மலரை விழிக்கச் செய்யும்
நல்லருணன் போன்றவொரு விழிப்பினாலே
தொகைத் தொகையாய் எழுங்கடலின் திரைகள் போல
தூமதிநேர் போர் சங்கம் ஊத வந்தோம் !

பயமுடனே இத்தனைநாள் கைகள் கட்டிப்
பட்டிட்ட துயரங்கள் போதும் ! போதும் !
வயலுழுதோம் ; வீதியிட்டோம் ; வீடமைத்தோம் !
வாழ்விற்குத் தேவை எலாம் வழங்கி, நாங்கள்
புயமலுத்தோம் ! பசித்தீயில் பெண்டு பிள்ளை
புழுப்போல துடி துடித்து வேகுதையோ !
அயர்விலாதப் புது விழிப்பு கொண்டுவிட்டோம் !
அச்சமிலை, பழிக்குப் பழி வாங்க வந்தோம் !

எமது கையால் செய்தளித்த ஆயு தத்தால்
எமையே நீர் கொல்லுதற்கு இச்சைகொண்டீர்;
உமக்குணவு அளித்த எம் கைகளாலே
உம் குலத்தை வேரறுக்க நேரம் ஆமோ?
அமைதியுடன் இருந்திட்ட ஆகாயத்தில்
அதிர் இடியும் மழைப் புயலும் தோன்றி விட்டால்
சுமை சுமையாய் விறகிட்டுக் கொளுத்தினாலும்
சுட்டிடுமோ? ஒற்றுமையால் சூழ்ந்து வந்தோம்!

உலர்ந்திருந்த-புல்லினிலே உரங்கொள் வாள்தான்
உண்டாகி விட்டதென்று உரைத்து விட்டோம்
கலகமிலாப் புதுக் குரலில் முழங்குகின்றோம்!
கண்ணுள்ளோர் தங்களுக்கே காட்சிவேண்டும்!
நலமுறவே உழைப்பவர்க்கே உணவு வேண்டும்;
நியாயமிது; நியாயமிது; நியாயமிஃதே!
'அல'வெனவே மறுப்பவர்கள் கடவுளேனும்
அடுத்தகணம் அவர் தலை எம் காலில் வீழும்!

21. நவராத்திரிகொலு

உழவுத் தொழிலாளி—நுதலினில்
உதிர்ந்த வேர்வைத் துளி
கொழுத்த முதலாளி—அணியினில்
கொலுவாச்சு வைரமாய்!

ஆலைத் தொழிலாளி—உடலினில்
அள்ளி எடுத்த ரத்தம்
காலன் முதலாளி—பேலாவில்
கள்ளாய் கொலு வாச்சு!

அச்சுத் தொழிலாளி—கண்ணில்
ஆடும் ஒளி அணைய
கொச்சை முதலாளி—வீட்டில்
கொலுவாச்சு விளக்காய்!

உண்மைக் கொலு விதனை—உங்களின்
உள்ளமே பார்க்கையிலே
மண்பாவைக் கொலுவை—கண்டிட
மயங்கிச் சொல்லுவதேன்?

22. எச்சரிக்கை

என்பிலா நாவில் சுவை எழுங்கால்
இருளாக இருளாக ஒளி எழுங்கால்
தன்னல மில்லா தொழிலாளர்
சக்தியில் சகம்ஆள் தகையெழாதோ ?

தண்ணீ ரதனில் தணலெழுங்கால்
சாவின் நிழலில் பிறப்பெழுங்கால்
மண்ணை பொன் செய் தொழிலாளர்
மதியில் புவிஆள் விதி எழாதோ ?

நத்தை யிடத்திலே முத்தெழுங்கால்
நாற்றச் சகதியில் பூ எழுங்கால்
உத்தமராகிய தொழிலாளர்
உளத்தில் உலகாள் உரமெழாதோ ?

தூக்கம் தனிலே கனவெழுங்கால்
சுண்டிய இஞ்சியில் உரப் பெழுங்கால்
காக்கும் தெய்வமாம் தொழிலாளர்
கருத்தில் கலிஆள் கனலெழாதோ ?

23 மே தினம்!

பரிதியதன் சுடர்ஜொலிக்கும் விண்ணதிலே
பனி மலரின் எழிற்சிரிக்கும் மண்ணதிலே
ஆனால்?...... ஆனால் ?......

கரிச்சுரங்கம், பொற்சுரங்கம், பஞ்சினாலை
கண்ணிருள தொழிலாளர் செய்தார் வேலை
ஆனால் ?...... ஆனால் ?......

வெறிபிடித்த பணப்பேய்கள் நஞ்சினாட்சி
விடுதலையை அடிமையெனச் செய்த சூட்சி
ஆனால் ?...... ஆனால் ?......

பொறி பறக்க தொழிலாளர் தீமனமே
புரட்சி செய்ய உரிமை தந்த மே தினமே !

TAMIL NADU ARCHIVES
No. 102450



டாக்டர் லோஹியாவும்—கவிஞர் கம்பதாஸனும்

காதலின் கூத்தை யெல்லாம்—உன்றன்
கவியில் கண்டேனையா

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

* * *

கம்பதாஸன் இக்கால யுவ எழுத்தாளர். கலை வல்லார். ஆவேசத் துடிதுடிப்புடன் புது வாக்குத் தேடி புதிய சாதனை வேண்டி நிற்கிறார். அவர் கொண்டுள்ள கருத்துக்கள்......................காவிய தெய்வத்தின் அபூர்வ வார்படத்திலே பழைய ரத்தம் பாய்ந்திருந்தாலும் புதுக் குரலின் தெளிந்த தொனிப்பு...............அவரது கவிகளுக்கு எனது மனமார்ந்த பாராட்டு...............உலக உற்பவத்தில் அதுவும் அதன் செயலாற்றும்.

—ஹரீந்தரநாத் சடோபாத்தியாயா

* * *

உண்மையில் கம்பதாஸன் எண்ணம் நன்று; கவிதை உள்ளம் நன்று. அவர் கவிகளில் நல்ல கற்பனையை—புதுமையை வரவேற்கும் தன்மையை—அதைப் போற்றும் ஆற்றலைக் காண்கின்றேன். தமிழ்நாடு நன்றி செலுத்த வேண்டும்.

—பாரதிதாஸன்

* * *

தமிழ் மொழியில் கவி பாரதியாருககுப் பிறகு இன்று கம்பதாஸனின் கவிதைகளே சகோதரத் தொழிலாளர்களுக்கு மின்சார சக்தியையும், நம்பிக்கையையும் உண்மையான கலைப் பண்பையும் தரக்கூடியதாகத் தோன்றியுள்ளது.

—என். ஜி. ராமசாமி

Wrapper printed at Shanti Press Madras-1